**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி**
**முன்னிலை:– திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,**
**கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.**
**2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 04 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**அசல் வழக்கு எண். 223/2021**
**( CNR No. TNTS01 000689 2021 )**

1) சமுத்திரம்

2) சண்முகத்தாய்

......... வாதிகள்

/எதிர்/

1) முத்தையா

2) ஈஸ்வரன்

3) கனிராஜ்

...... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தபோது, முன்னதாக வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ராஜு அவர்களும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சதீஷ் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத நிலையில், 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று வழக்கு விசாரணையின்போது மனுதாரர் அழைத்தும் ஆஜராகாததால் இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**தீர்ப்புரை**

பிராதின் தபசில் சொத்துக்களில் வாதிகளுக்குரிய 2/5 பங்கு பாகத்தை நயமிதம் பார்த்து பிரிவினை செய்து, பிரிந்த பாகத்தை வாதிகளின் தனித்த சுவாதீனத்திற்கு விட்டுப்போகும்படிக்கும், தவறும் பட்சத்தில் வாதிகளே பிரிவினை செய்து தனித்த சுவாதீனம் அடைந்து கொள்ளும்படிக்கும், இவ்வழக்கில் ஓர் தீர்வு ஏற்படும்வரை பிரதிவாதிகளோ, அவர்களின் வாரிசுகளோ, வகையாட்களோ, ஏஜென்ட்டுகளோ, பிராதின் தபசில் சொத்துக்களை வேறு மூன்றாம் நபர்களுக்கு வில்லங்க பாராதீனங்கள் செய்துவிடாதிருக்கும் வகையில் மேற்படியார்களுக்கு எதிரில் ஒரு நிரந்தர ஏவுக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும், வாதிகளுக்கு இவ்வழக்கின் செலவு தொகை பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும்படிக்கும் உத்தரவிட வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**Plaintiff called absent. No representation. Already sufficient time given. Hence, this suit is dismissed for default.**

2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(S/d-S.Manojkumar)
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
தென்காசி.
அசல் வழக்கு எண். 223/2021
தீர்ப்புரை: வரைவு / நேரிய
நாள்: 04.10.2024